
Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 5, 2023

புதன்கிழமை ஏப்ரல் 05, 2023 | ஒளி: 08 கதிர்: 244 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



பிறர் தீமை செய்வதைக் கண்டித்துத் தடுத்து, அறிவு புகட்டுகிறவர்கள், நல்லோருக்கு அருமையானவர்கள். ஆனால், தீயவர்களுக்கு வெறுப்பானவர்கள். (தர்மபோதனை)

# ‘சிவன் தோசம் குல நாசம்’



சிவன் தலையில் கை வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கி செல்லும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

‘சிவன் தோசம் - குல நாசம்’ என்ற வாக்கு மீது இந்துக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது என்றும் நினைவுபடுத்தினார்.

**“தெற்கில் மாத்திரமே நீதிமன்றங்கள் சுயாதீனமாகவும் தைரியமாகவும் செயற்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் உத்தரவை அங்குள்ள பிக்குகள், பாதுகாப்பு தரப்பினர் மதிப்பதில்லை**

பாராளுமன்றத்தில் நேற்று (04) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

ஓர் இனம், காலாகாலமாக கடைப் பிடித்து வந்த மத நம்பிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள், நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறைவடையவில்லை. தமிழர்களின் இருப்பும் சைவத்தின் இருப்பும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது கவலைக்குரியது.

வவுனியா, வெடுக்குநாறி காட்டுப்பகுதியில் தமிழ்மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவலிங்கங்கள், விக்கிரகங்கள் என்பன உடைத்தெறியப்பட்டு உள்ளன. அம்மன் விக்கிரகத்தின் கழுத்துப் பகுதியை வெட்டி வீசி எறியும் அளவுக்கு இந்த நாட்டில் இனவாதம் தலைவிரித்தாடுகின்றது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் ‘கோட்டா’ அதிகரிப்பு



தமிழ்-சிங்கள புத்தாண்டு மற்றும் அதனோடு இணைந்த விடுமுறை நாள்களை கவனத்தில் கொண்டு, எரிபொருளுக்கான ‘கோட்டா’ அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நேற்று (04) நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.

ஓட்டோவுக்கான ஒதுக்கீடு 5 லீற்றரில் இருந்து 8 லீற்றர் ஆகவும் மோட்டார் சைக்கிள்கள் ஒதுக்கீடு 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும் பஸ்களுக்கான ஒதுக்கீடு 40

தொடர்ச்சி P2

## மஞ்சள், நீல காஸ்கள் ‘மயில்’க்கு மேல் குறைந்தன



லிட்ரோ மற்றும் லாஃப் காஸ் சிலிண்டர்களின் விலைகள், நேற்று (04) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில், 1,000 ரூபாய்க்கு மேல் குறைக்கப்பட்டுள்ளன.

லிட்ரோ எரிவாயுவின் 12.5 கிலோ கிராம் காஸ் சிலிண்டர் விலை 1,005 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம், ரூ.4,743 ஆக இருந்த 12.5 கிலோ கிராம் காஸ் விலை ரூ.3,728 ஆகவும், ரூ.1,904 ஆக இருந்த 5 கிலோ கிராம் காஸ் விலை

தொடர்ச்சி P2

பொன்மலை குடா விவகாரம்

## மதத்தலைவர்களுக்கு எம்.எஸ்.டீ கொடுத்தது யார்

### ஹக்கீம், மஹ்ரூப் கேள்வி; அரசாங்கம் மௌனம்





திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்துக்கு சென்ற மதத்தலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்பு பிரிவு (எம்.எஸ்.டீ) அதிகாரிகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என ரவூப் ஹக்கீம், இம்ரான் மஹ்ரூப் ஆகியோர், சபையில் அதிரடியாக கேள்விகளைக் கேட்டனர்.

தொடர்ச்சி P2

## மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை

■ பாறுக் ஷிஹான்

புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு, கல்முனை மாநகர சபை எல்லைக்குள் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் திங்கட்கிழமை (03) இறைச்சிக் கடை உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும்

## அரச ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம்



உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (04) செவ்வாய்க்கிழமை,

தொடர்ச்சி P2

## முடியாது, முடியாது



எரிவாயு விலை குறைக்கப்பட்டதால் பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாதென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என். கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார். சுமார் 75 சதவீதமான வெதுப்பக உற்பத்திகளுக்காக டீசல், விறகு மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதே இதற்கு காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கடற்படையினர் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு

■ செந்தூரன் பிரதீபன்


ஊர்காவற்றுறை, தம்பாட்டி பகுதியில் கடற்படையினர், கடற்படை முகாமுக்கு காணி அளவீட்டை மேற்கொண்ட முயற்சிக்கு பொதுமக்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

நில அளவை உத்தியோகத்தர்கள் நேற்று (04) காலை வந்திருந்தனர்.

தொடர்ச்சி P2



## மலைகளில் புத்தரை அமர வைப்பதே வேலை




புத்தசாசனம், மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஓர் இனவாதியென தெரிவித்த இரா. சாணக்கியன், வடக்கு, கிழக்கில் எங்கு மலைகளைக் கண்டாலும் புத்தரை அமரவைப்பதுதான் அவரது வேலையாகும் என்றார்.

தொல்லியல் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால், இனவாத அமைச்சர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வர முடியாத நிலையை ஏற்படுத்தி முடக்குவோம் என்றார்.

தொடர்ச்சி P2

## ஐ.ஜி.பிக்கு நீடிப்பு



தற்போதைய பொலிஸ்மா அதிபராக சீ.டி. விக்கிரமரத்னவை மீண்டும் மூன்று மாதங்களுக்கு நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சிபாரிசுக்கு அரசியலமைப்பு பேரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இந்த நியமனம் 2023 மார்ச் 26ஆம் திகதி முதல் அமலுக்கு வரும். அரசியலமைப்புப் பேரவை அதன் தலைவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஏப்ரல் 01ஆம் திகதி கூடியபோதே இந்த அங்கிகாரம் வழங்கப்பட்டது.

## “இனங்களுக்கு இடையே பிரச்சினைகள் தோன்றும்”



இனங்களுக்கு இடையே பிரச்சினைகள் புதிய எல்லை நிர்ணயம் ஊடாக மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன்னர், அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய மீளாய்வு குழுவை அமைத்து தவறுகளை திருத்திக்கொள்ள

தொடர்ச்சி P2

## “தெரியாதென ஜனாதிபதி கூறவே முடியாது”

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி ஆக்கிரமிப்பும் இன, மத அடையாள அழிப்பும் தொடர்பில் தனக்குத் தெரியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வால் கூற முடியாதென இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னிமாவட்ட எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான

தொடர்ச்சி P2

## ‘ராமர்பாலம்’ ஊடாக இலங்கைக்கு பக்தர்களை அழைத்துவரத் திட்டம்

தலைமன்னாரில் இருந்து தமிழகம் தனுஷ்கோடி வரை ‘ராமர்பாலம்’ பகுதி ஊடாக, கப்பல் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும், ஆன்மிக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்திய தூதரகத்தின் துணை தூதுவரும், அந்நாட்டு முதலீட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், இலங்கை கடற்படை அதிகாரிகள், துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், நில அளவை திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைய இலங்கையின் வடபகுதியில் உள்ள தலைமன்னாருக்கும், இந்தியாவின் தென்முனையான தனுஷ்கோடிக்கும் இடையிலான ராமர்



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘சிவன் தோசம் குல நாசம்’

முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியில் இருந்து சிவ சின்னங்கள்,சூலம் மற்றும் சிவலிங்கம் அழிக்கப்பட்டன .குருந்தூர் மலையில் விகாரை நிர்மாணிக்கும் பணிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டம் பல தடவைகள் தடையுத்தரவு பிறப்பித்தும்,நீதிமன்றத்தை மதிக்காமல் விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் மாத்திரமே நீதிமன்றங்கள் சுயாதீனமாகவும்,தைரியமாகவும் செயற்படுகின்றன .வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் பிறப்பிக்கும் உத்தரவை அங்குள்ள பிக்குகள், பாதுகாப்பது தரப்பினர் மதிப்பதுதில்லை,

வவுனியா வெடுக்குநாறி பகுதியில் தமிழர்கள் 1957 ஆம் ஆண்டுமுதல் சிவ வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள்.இந்த பகுதி தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லை அத்துடன் தொல்லியல் அளவையியல் வரைபுக்குள் உள்வாங்கப்படவுமில்லை,இவ்வாறான பின்னணியில் இந்துக்களின் மத உரிமைகளுக்கு தொல்லியல் திணைக்களம் இடையூறு விளைவிப்பதை ஏற்க முடியாது.

இனவாதம் மற்றும் பௌத்தவாதம் பற்றி மேலோங்கி கருத்துரைக்கின்ற தரப்பினர் தான் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள் .தமிழர்களின் காணி உரிமையும் பறிக்கப்படுகிறது,மத உரிமைகளும் பறிக்கப்படுகின்றன .

‘சிவன் தோசம் - குல நாசம்’ என்ற வாக்கு மீது இந்துக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது.சிவன் தலையில் கை வைக்கப்பட்டுள்ளது,ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கி செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.அதுமட்டுமல்ல ‘‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் ‘‘என்ற வார்த்தை நாளை உங்களுக்கு மிக மோசமான நிலையை ஏற்படுத்தும்.

உடைக்கப்பட்ட சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்களை மீள் அமைப்பதாக இரு அமைச்சர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி பகுதிக்கு விஜயம் செய்தார்கள். இந்த விவகாரம் சட்ட விசாரணைக்கு உட்பட்டுள்ளது,ஆகவே சட்டத்தின் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டு விட்டு திரும்பி விட்டார்கள்.உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் மற்றும் சிவலிங்கத்தை மீள் அமைப்பதற்கு எவ்வித சட்டத் தடைகளும் காணப்படவில்லை.ஆலயப்பகுதியை சேதப்படுத்தினார்கள் என்ற வழக்கு மட்டுமே உள்ளது.

இந்த இரு தமிழ் அமைச்சர்களும் நினைத்திருந்தால் விக்கிரகங்களை மீள பிரதிஷ்டை செய்திருக்க முடியும்.. உடைக்கப்பட்ட சிவலிங்கத்தைக்கூட மீண்டும் வைக்க முடியாத அமைச்சர்கள் இவர்கள். இந்த நாட்டின் அமைச்சர்களாக தமிழர்கள் இருந்தால் அவர்கள் வெறும் சடப்பொருட்களாகமட்டுமே இருக்க முடியும் என்பதற்கு இந்த இரு அமைச்சர்களும் சிறந்த உதாரணம். உண்மையில் இந்த அமைச்சர்கள் ஆடையுடன் தான் திரிகிறார்களா என்ற கேள்வி தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தற்போது நான் இங்கு பேசிக்கொண்டிருக்கும்போதுகூட கிளிநொத்தி மாவட்டத்தில் கௌதாரிமுனை பகுதியில் 100 ஏக்கர் காணி இறால் பண்ணை செய்கைக்காக அளக்கப்படுகிறது.கடற்தொழில் அமைச்சரின் பினாமியின் நிறுவனங்களான கனிரா சீ பூட் பிரைவேட் லிமிடெட் ,நோர்த் சீ பூட் பாம் ஆகிய நிறுவனங்களுக்கே இந்தக்காணி 50-50 ஏக்கர்களாக அளக்க முயற்சிக்கப்படுகின்றது. .3700 ஆண்டுகாலமாக கௌதாரி முனை பகுதியில் வாழும் தமிழர்கள் இந்த செயற்பாட்டுக்கு கடுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள் .இதனால் தற்போது அளக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்றார்.

# மஞ்சள், நீல காஸ்கள் `மயிலுக்கு` மேல் குறைத்தன

ரூ.1,502 ஆகவும், ரூ.883 ஆக இருந்த 2.3 கிலோ கிராம் காஸ் விலை ரூ.700 ஆகவும் குறைந்துள்ளது என்றார்.

இதன்படி 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 402 ரூபாவினாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 183 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனம் எரிவாயு சிலிண்டரின் விலையைக் குறைத்ததையடுத்து லாஃப் நிறுவனமும் எரிவாயு சிலிண்டர் விலையை குறைத்துள்ளது.

12.5 கிலோ கிராம் நிறையைக் கொண்ட லாஃப்ஸ் காஸ் சிலிண்டரின் விலை ரூ.1,290 ரூபாவினாலும், 5 கிலோ கிராம் சிலிண்டர் 516 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை இன்று (04) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமென லாஃப்ஸ் காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

**“ இரண்டு வகையான சமையில் எரிவாயு விலைகளும் குறைக்கப்பட்டுள்ளது. என்று அந்தந்த நிறுவனங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் அறிவித்தனர்**

இலங்கை மத்திய வங்கியினால் புழக்கத்தில் விடப்பட்டிருக்கும் 1,000 ரூபாய் தாளில் மயில் பறவை அச்சிட்டு இருப்பதால், அந்தத் தாளை பலரும் மயில்தாள் என்றே அழைப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் கோட்டா அதிகரிப்பு

லீற்றரில் இருந்து 60 லீற்றர்

- கார்களுக்கான ஒதுக்கீடு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றர்

-கனரக வாகனங்களுக்கான ஒதுக்கீடு 15 லீற்றரில் இருந்து 25 லீற்றராகவும்

-லொறிகளுக்கான ஒதுக்கீடு 50 லீற்றரில் இருந்து 75 லீற்றராகவும்

-சிறப்பு நோக்கங்களுக்கான வாகனங்களுக்கான ஒதுக்கீடு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும்

-வான்களுக்கான ஒதுக்கீடு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு வழங்கப்படும் கோட்டாவை அதிகரித்தால், கட்டணங்களை குறைப்பதாக ஓட்டோ சாரதிகள் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# “தெரியாதென ஜனாதிபதி கூறவே முடியாது”

கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி ஆக்கிரமிப்பும் ,இன,மத அடையாள அழிப்பும் துரிதமாக முன்னெடுக்கப்படுகிறது.தமக்கு தெரியாமல் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் குறிப்பிட முடியாது. ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரியும் கீர்த்தி தென்னகோன் என்பவர் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கு விரைவான தீர்வு காண ஜனாதிபதி பொறுப்புடன் செயற்பட வேண்டும்.முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கு மற்றும் கிழக்கு ஜனாதிபதி செயலணி என்பதொன்றை ஸ்தாபித்தார்,அதன்மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது

தென்பகுதி மீனவர்கள் கொக்குளாய் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்,இவர்களுக்கு நீர்கொழும்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளில் சொந்த வீடுகள் உள்ளன ஆனால் இவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமிழர்களின் நிலங்களை வழங்க அரச தரப்பினர் விசேட கவனம் செலுத்துகின்றனர்.

இதேவேளை, இராமேஸ்வரத்திற்கும்,தலைமன்னாருக்கும் இடையில் கப்பல் சேவை ஏற்கெனவே இருந்தது. புவியியல் ரீதியில் இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையில் 18 கிலோமீற்றர் கடல் மைல் தூரமே காணப்படுகிறது.ஆனால் பாண்டிச்சேரிக்கும்,காங்கேசன்துறைக்கும் இடையிலான கடல் மைல் தூரம் 56 கிலோமீற்றராக காணப்படுகிறது.ஆகவே மூன்று மடங்கு அதிகமான தூரத்தை கொண்டுள்ள காரைக்கால்- காங்கேசன்துறை கப்பல் சேவையை ஏன் ஆரம்பிக்க வேண்டும்? என்றும் கேள்வியெழுப்பினார்.

இராமேஸ்வரம்- தலைமன்னார் இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.இந்திய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது இவ்விடயம் தொடர்பில் கதைத்த போது இராமேஸ்வரம்- தலைமன்னார் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் தற்போது மாறுப்பட்ட முறையில் காரைக்கால்- காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. .ஆகவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி உட்பட துறைசார் தரப்பினர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

# மதத்தலைவர்களுக்கு எம்.எஸ்.டீ கொடுத்தது யார்

சபையில் அதிரடியாக கேள்விகளைக் கேட்டனர்.

அவர்களின் கேள்விகளுக்கு சபையில் அத்தருணத்தில் நேற்றிருந்த எந்தவோர் அமைச்சரும் பதில் வழங்கவில்லை.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இடையிட்டு கேள்வியொன்றை எழுப்பினார்.

திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் பௌத்த பிக்கு ஒருவரினால் பௌத்த சிலை வைக்க முற்பட்டபோது ஏற்பட்ட சம்பவம் தற்போது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது. குறித்த மதகுருவுக்கு அமைச்சு பாதுகாப்பு அதிகாரி வழங்கப்பட்டிருப்பதும் அவர்கள் அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பொது மக்களுக்கு துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் நிலைமை சிலைவைப்பதை தடுத்த மக்களின் நிலைமையும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

அதேபோன்று தொல்பொருள் நடவடிக்கையின் போது எமது பிரதேசத்தில் காலாகாலமாக வாழ்ந்துவந்தவர்களின் வீடுகள், அவர்களின் விவசாய பூமிகள் அபகரிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன?

**“ அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அந்த இடத்துக்கு சென்றார்கள் என்பது தொடர்பில் நீங்கள் தேடிப்பார்ப்பீர்களா? எமக்கு அறிக்கை சமர்ப்பீர்களா ? என கேட்டார்**

இதற்கு பௌத்த விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பதிலளிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை இதுதொடர்பாக தேடிப்பார்த்து உங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் தொல்பொருள் நடவடிக்கையின் போது ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் தகவல் வழங்கினால் நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறுக்கிட்டு, திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்துக்கு சில மதத்தலைவர்கள் அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுடன் சென்றிருக்கின்றனர். இதன்போது அந்த பிரதேசத்தில் எதிர்ப்பு தெரிவித்த மக்களை நோக்கி துப்பாகி நீட்டி அச்சுறுத்தி இருக்கின்றனர்.அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அந்த இடத்துக்கு சென்றார்கள் என்பது தொடர்பில் நீங்கள் தேடிப்பார்ப்பீர்களா? எமக்கு அறிக்கை சமர்ப்பீர்களா ? என கேட்டார்.

**“ தற்போது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது. குறித்த மதகுருவுக்கு அமைச்சு பாதுகாப்பு அதிகாரி வழங்கப்பட்டிருப்பதும் அவர்கள் அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பொது மக்களுக்கு துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் நிலைமை சிலைவைப்பதை தடுத்த மக்களின் நிலைமையும் கேள்விக்குறியாகி இருக்கிறது**

அதற்கு அமைச்சர் அமைச்சு பாதுகாப்பு பிரிவு பௌத்த கலாசார அமைச்சுக்கு உட்பட்டது அல்ல. அந்த கேள்வியை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் முன்வையுங்கள் என்றார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க.

## மலைகளில் புத்தரை அமர வைப்பதே வேலை

பாராளுமன்றத்தில் நேற்று (04) செவ்வாய்கிழமை உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மட்டக்களப்பு குசலானமலைக்கு நீங்கள் (விதுர விக்கிரமநாயக்க) வந்த போது மக்கள் உங்களை விரட்டியடித்தார்கள்,அதனால் தான் குசனாலமலையில் இன்று சைவ மத வழிபாடுகள் இடம்பெறுகின்றன .

வவுனியாவில் வெடுக்குநாறிமலையில் பிரச்சினை,முல்லைத்தீவில் குருந்தூர் மலையில் பிரச்சினை,மட்டக்களப்பில் குசலானமலையில் பிரச்சினை தற்போது திருகோணமலையில் அரிசி மலையில் பிரச்சினை பிரச்சினைகளை தோற்றுவிக்கும் செயற்பாடுகள் மாத்திரமே உங்களால் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்..

இதற்கு பதிலளித்த புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஒருவர் எமக்கு பரிசொன்றை வழங்கினால் அதனை நாம் ஏற்காவிட்டால்,அந்த பரிசு உரிய தரப்பினருக்கு சொந்தமாகும் என்றார்.

## கடற்படையினர் காணி சூவீகரிப்பு: எதிர்ப்பு

இதனால், குறித்த பகுதியில் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த ஊர்காவற்றுறை பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர்

எனினும், தமது எதிர்ப்பினை கைவிடாது மக்கள் வெளிப்படுத்துவதுடன் நில அளவையாளர்களை திரும்பிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தனர்.

## மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை

இதன்படி ஒரு கிலோ கிராம் தனி இறைச்சியை 2,000 ரூபாவுக்கும் 200 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ கிராம் இறைச்சியை 1,800 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது நேற்று (04) முதல் அமல்படுத்தப்பட்டது.

அத்துடன் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் இவ்விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும் பொருட்டு குறித்த விலைப்பட்டியல் ஆணையாளரினால் இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

## அரசு ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம்

எதிர்க்கட்சியில் சுயாதீன அணியை சேர்ந்த ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரான சுமித் ஆராச்சி முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கோரிக்கையை முன்வைத்த சுமித் ஆராச்சி எம்.பி., உள்ளூராட்சி தேர்தலுக்கான தினம் நாளுக்கு நாள் பின்னால் போகின்றது. இந்தத் தேர்தலில் பெருமளவான அரச ஊழியர்களும் போட்டியிடுகின்றனர். சில மாதங்களாக அவர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை. உள்ளூராட்சி அமைச்சர் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார். ஆனால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் புத்தாண்டில் அவர்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளனர்.

இதன்போது பதிலளித்த இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மார்ச் 9 ஆம் திகதி முதல் ஏப்ரல் 25 ஆம் திகதி வரையில் அவர்களுக்கு அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 10 ஆம் திகதி அவர்கள் அனைவருக்கும் அடிப்படை சம்பளம் கிடைக்கும் என்றார்.

## இனங்களுக்கு இடையே பிரச்சினைகள் தோன்றும்

நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (04) உள்ளூராட்சி எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அறிக்கையை பார்க்கும் போது இதன்மூலம் வரலாற்று தவறொன்று நடக்கவுள்ளது. இதனூடாக இனம், மதங்களுக்கு இடையே பிரச்சினை ஏற்படும் வகையிலேயே காணப்படுகின்றது. அதற்கு முன்னர் மீளாய்வு குழுவை அமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## முடியாது, முடியாது

மொத்தமாக சுமார் 7,000 வெதுப்பகங்களில் 2,000 இற்கும் குறைவான வெதுப்பகங்களே எரிவாயுவைப் பயன்படுத்துகின்றன.

ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி மேலும் குறைந்து, கோதுமை மா, முட்டை, மாஜரின் விலைகள் குறைந்தால் மட்டுமே பேக்கரி உற்பத்திகளின் விலைகளை எதிர்காலத்தில் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## ‘ராமர்பாலம்' ஊடாக இலங்கைக்கு பக்தர்களை அழைத்துவரத் திட்டம்

பால பகுதியை அபிவிருத்தி செய்து, அதன்மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தலைமன்னார் முனையத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம் ஏற்படும் சாதகத் தன்மை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு 3 கோடி பக்தர்கள் வருகின்றனர். அவர்களில் ஒரு பகுதியினரை ராமல் பாலம் ஊடாக அழைத்து வந்தால் அதன்மூலம் சுற்றுலாத்துறை மேம்படும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## பேராசிரியர் க. கைலாசபதி இட்ட அடித்தளம்:

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஓங்கி வளர்ந்தது

### யாழ்ப்பாண வளாக முதல் தலைவர், பேராசிரியர் கைலாசபதி பிறந்து 90 ஆண்டுகள்



கலாநிதி கா. இந்திரபாலா

யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன பல்கலைக்கழக நிலையிலான நிறுவனத்தை அமைப்பதற்கு, 200 ஆண்டுகளுக்கு முன்னரே முயற்சி எடுக்கப்பட்டது. கலாநிதி டானியெல் புவரை தலைவராகக் கொண்டு, 1822இல் வட்டுக்கோட்டையில் 'Batticotta Seminary' என்ற பெயருடன் மேற்கத்திய பல்கலைக்கழகங்களின் கல்விமுறையை ஒத்த ஒரு கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் அமைக்கப்பட்டது.

அங்கு செயலாற்றியவர்கள், அதற்கு அக்காலப் பிரித்தானிய அரசிடம் இருந்து பல்கலைக்கழக அங்கிகாரத்தைப் பெறும் நோக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த நோக்கம் நிறைவேறப் பல தடைகள் இருந்தன. எனினும், செமினரியின் பின்னர், 'யாழ்ப்பாணக் கல்லூரி'யாக மாறிய நிறுவனத்தில் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன. (முதலில், சென்னைப் பல்கலைக்கழகம்; பின்னர், கல்கத்தாப் பல்கலைக்கழகம்; அதன் பின்னர், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டங்கள்)

வட்டுக்கோட்டை செமினரி நிறுவப்பட்டு 150 ஆண்டுகளின் பின்னர்தான், யாழ்ப்பாணத்தில் அரச அங்கிகாரம் பெற்ற பல்கலைக்கழக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. அதுதான், 'இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம்.

1974இல் அது திறக்கப்பட்டபோது, ஒரு வரலாற்று முக்கியத்துவம் உடைய நிகழ்ச்சியாக அமைந்தது. அந்த உயர்கல்வி நிறுவனத்தின் முதலாவது தலைவராக க. கைலாசபதி நியமிக்கப்பட்டார்.

**தமிழ் இலக்கியப் பேறிஞர்**

கைலாசபதி நியமனம் பெற்றபோது, தமிழ் இலக்கிய உலகில் மிகவும் அறியப்பட்டவராகவும் நன்மதிப்பைப் பெற்றவராகவும் திகழ்ந்திருந்தார். அவர், எழுதிய இலக்கிய விமர்சன நூல்கள், தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டதால், பரவலாக அங்கு படிக்கப்பட்டு, இலக்கிய வட்டங்களில் எடுத்துப் பேசுவதற்கும் விமர்சன ரீதியான ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதற்கும் அவை பொருளாய் அமைந்தன.

இதைவிட மேலாக, இவரது ஒப்பீட்டு இலக்கிய ஆய்வின் விளைவாகச் சங்க இலக்கியம் எனப் பொதுவாக வழங்கப்படும் பழந்தமிழ்ப் பாணர் பாடல்களாகிய வீரயுகப் பாடல்கள் பற்றி எழுதிய ஆங்கில நூலாகிய *Tamil Heroic Poetry* என்ற நூல் இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்டு, இவருக்கு சர்வதேச பிரபல்யத்தைக் கொடுத்திருந்தது.

**பிறப்பும் படிப்பும்**

கைலாசபதி பிறந்த இடம், மலேசியாவின் தலைநகராகிய கோலாலம்பூர் ஆகும். தந்தையார் இளையதம்பி கனகசபாபதி. இவர் கோலாலம்பூரில் பிரித்தானிய நிர்வாகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, கைலாசபதி 1933 ஏப்ரல் ஐந்தாம் திகதி பிறந்தார். இவர், கோலாலம்பூர் விக்டோரியா நிறுவனத்தில் கல்வி கற்கத்தொடங்கிய காலத்தில், இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்தது.

பிரித்தானியரை எதிர்த்துப் போராடிய ஜப்பானியர், 1942இல் சிங்கப்பூரை கைப்பற்றிய பின்னர், கோலாலம்பூர் ஜப்பானியரின் ஆட்சிக்கு உட்பட்டது. இந்நிலையில், கைலாசபதியின் கல்வி பாதிக்கப்பட்டது. 1945இல் போர் முடிவுற்றதும், தாயார் தில்லைநாயகியுடன் கைலாசபதி இலங்கைக்கு வந்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.


அங்கு, பத்தாம் வகுப்பு வரை படித்த பின்னர், அவர் கொழும்பு ரோயல் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்று, பல்கலைக்கழக புகுமுகத் தேர்வில் சித்தியடைந்து, 1953இல் இலங்கை பல்கலைக்கழகத்துக்கு (பேராதனை) சென்றார்.


புதிதாகத் திறக்கப்பட்ட பேராதனை வளாகத்தின் கலைப் பீடத்துக்கு 1953இல் முதலாண்டு மாணவர்களாக நேராகச் சென்ற மாணவர் குழுவில் (அதற்கு முன் கலைப்பீடம் தற்காலிகமாக கொழும்பில் இயங்கியது) கைலாசபதியும் ஒருவராவர்.

இராமநாதன் விடுதிச்சாலையில் தங்கியிருந்து பல்கலைக்கழகக் கல்வியைத் தொடங்கிய காலத்தில், கைலாசபதிக்கு இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் இருந்தது. இதனால், முதலாண்டு முடிந்ததும், தமிழ் இலக்கியத்தை சிறப்புப் பாடமாகக் கற்று, 1957இல் கலைமாணிப் பட்டத்தை (முதல் பிரிவில்) பெற்றார். பல்கலைகழகத்தில் இருந்தபோது, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்களிலும் பங்கேற்று நடித்தார்.

கலைமாணிப் பட்டத்தைப் பெற்றபின்னர், கைலாசபதி 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டு, ஓராண்டு செல்லும் முன்னர் அச்செய்தித்தாளின் பிரதம ஆசிரியராக உயர்வு பெற்றார்.

ஒரு தேசிய செய்தித்தாளின் பிரதம ஆசிரியர் பதவியில் இருந்து, இலங்கையின் தமிழ் ஊடகத் துறையில் சில முக்கிய முன்னேற்றங்களை ஏற்படுத்த, அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. பாடசாலைக் கல்வியை முழுமையாகத் தமிழ் மூலம் கற்ற, ஒரு புதிய தலைமுறை உருவாகியிருந்த காலம் அது. இந்தத் தலைமுறையைச் சேர்ந்த பல இளம் எழுத்தாளர்களுக்கு கைலாசபதி பல வகைகளில் வழிகாட்டி, ஊக்கம் அளித்து, இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார்.



பேராசிரியர் க. கைலாசபதி
1933 – 1982

இலக்கிய வளர்ச்சியில் அவருக்கு இருந்த பேரார்வம், அவரைப் பல்கலைக்கழகத்துக்கு ஈர்த்தது. இதனால், 1961இல் ஊடகத்துறையை விட்டு, இலங்கை பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றவும் ஆய்வு நடத்தவும் தொடங்கினார்.

ஐரோப்பிய இலக்கிய ஆய்வாளர் கையாண்ட ஒப்பீட்டு இலக்கிய ஆய்வுமுறைகளைத் தமிழ் இலக்கிய ஆய்வில் பயன்படுத்த கைலாசபதி பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தார். பழந்தமிழ்ச் செய்யுள்களை ஒத்த, பழம் கிரேக்க மொழிச் செய்யுள்கள் மற்றும் அயர்லாந்து போன்ற பிற ஐரோப்பிய இடங்களில் தோன்றிய பழைய பாடல்கள் ஆகியவற்றுடன் பழந்தமிழ்ச் செய்யுள்களை ஆய்வுசெய்வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் மலர்ந்தது.

ஐரோப்பிய இலக்கியத்தில் சிறப்பான இடத்தைப் பெற்று நிற்கும் கிரேக்க புலவராகிய ஹோமருடைய கவிதையை பழந்தமிழ்க் கவிதையுடன் ஒப்பிட்டு, இரண்டும் வீரயுகக் கவிதை என வழங்கப்படும் இலக்கியத்துக்கு உரிய சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றன என விளக்கும் நோக்கத்துடன் மேற்படிப்பு ஆய்வை அவர் தொடங்கினார்.

**கலாநிதிப் பட்டம்**

இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற கிரேக்க இலக்கியப் பேராசிரியரான ஜோர்ஜ் தொம்சனின் வழிகாட்டலில் ஐரோப்பிய வீரயுகக் கவிதையைப் பழந்தமிழ்ப் பாணர் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆய்வுரை எழுதி, 1966இல் கலாநிதி பட்டத்தைப் பெற்று, பேராதனைக்குத் திரும்பிவந்து, தன் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

**வளாகத் தலைவர்**

1970ஆம் ஆண்டு தேர்தலை அடுத்து, நாட்டில் பல தீவிர மாற்றங்கள் இடம்பெற்றன. அவற்றுள் ஒன்றாக, தனிப் பல்கலைக்கழகங்களாக இருந்த, எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, இலங்கை பல்கலைக்கழகம் என்ற ஒரு நிறுவனத்தின் வளாகங்களாக மாற்றப்பட்டன. இச்சூழ்நிலையில், கைலாசபதி பேராதனையை விட்டுக் கொழும்பு, களனி ஆகிய வளாகங்களில் பணிபுரியச் சென்றார்.

எல்லாப் பல்கலைக்கழகங்களையும் ஒன்றாக இணைத்தமை, பல்கலைக்கழகக் கல்வித்துறை தொடர்பாக அரசாங்கம் எதிர்நோக்கிய பாரிய சவால்களைச் சமாளிப்பதற்கு உதவவில்லை. அரசாங்கத்தால் இலகுவில் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் பல எழுந்திருந்தன.

நீண்டகாலத் திட்டம் எதுவுமின்றி, உயர்கல்வி நிறுவனங்களை வளரவிட்டமை, அரசாங்கத்துக்குப் பெருந்தாக்கத்தை உண்டுபண்ணியது. படிப்படியாக, நாட்டில் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்றிருந்தும் பல்கலைக்கழகத்தில் அவர்களுக்கு இடம் இருக்கவில்லை. இந்நிலையில், 1974இல் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

களனி வளாகத்தில் தமிழ், இந்து நாகரிகம் ஆகியவற்றுக்கான துறையின் தலைவராக இருந்த கைலாசபதி, புதிய யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு புதிய உயர்கல்வி நிறுவனத்தை அமைக்கும் பாரிய பொறுப்பை அவர் ஏற்கவேண்டியிருந்தது. திடீரெனப் புதிய வளாகம் ஒன்றைத் திறக்க அரசாங்கம் தீர்மானித்ததால், எந்தவித திட்டமோ கட்டடங்களோ தகுதிவாய்ந்த பல்கலைக்கழகஆசிரியர்களோ இல்லாது, உயர்கல்வி நிறுவனம் ஒன்றை அமைக்கவேண்டிய நிலை காணப்பட்டது. இவற்றைப் பெறுவதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்யக்கூடிய வசதியையோ, விருப்பையோ உடையவராகக் கல்வி அமைச்சர் இருக்கவில்லை.

திருநெல்வேலியில் இருந்த பரமேஸ்வரா கல்லூரி மூடப்பட்டு, அதன் காணியும் கட்டடங்களும் புதிய வளாகத்தின் ஒரு பீடத்தைத் தொடக்குவதற்குக் கொடுக்கப்பட்டன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் பட்டதாரி வகுப்புப் பிரிவுக்குரிய கட்டடங்கள், நூலகம், ஆசிரியர், மாணவர், நிர்வாகப் பொறுப்பில் இருந்தோர் என, கல்லூரியின் ஒரு பாகம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு, அறிவியல் பீடம் தொடக்கப்பட்டது. (நூலகமும் காணி கட்டடங்களும் 1977ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டன).

அத்துடன், அரசாங்கத்துக்குப் பரவலாக வட இலங்கையில் பலத்த எதிர்ப்பும் காணப்பட்டது. பல்கலைக்கழகம் ஒன்றைத் தொடக்குவதற்குச் சாதகமான நிலைமை அப்பொழுது யாழ்ப்பாணத்தில் காணப்படவே இல்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான், கைலாசபதி வளாகத்தின் நிர்வாகப் பொறுப்பைத் தைரியமாக ஏற்றார். அவருடைய அயராத உழைப்பின் மூலம், வெகு விரைவில் யாழ்ப்பாண மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றார்.

**வளாகத்தின் வளர்ச்சி**

வளாகம் இரண்டு பீடங்களுடன் தொடக்கப்பட்டபோது, மனிதப் பண்பியல் பீடத்தில் நான்கு துறைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தன. பொருளியல், புவியியல், ஆங்கிலம் ஆகிய துறைகளுக்கு அனுமதி இருக்கவில்லை. எனினும், மூன்று ஆண்டுகள் செல்லும் முன்னர், புதிய துறைகளை அமைத்து, புதிய கட்டட வேலைகளைத் தொடங்கி, ஒரு பல்கலைக்கழகத்துக்குத் தேவைப்பட்ட அத்திவார வேலைகளைச் சிறப்புறச் செய்து, தகைமை பெற்ற ஆசிரியர்கள் நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கி, புதிய நிறுவனத்துக்கு வேண்டிய அங்கிகாரத்தை கைலாசபதி பெற்றுக்கொடுத்தார்.

கைலாசபதி 1977இல் பதவியைவிட்டு அமெரிக்கா செல்லும் முன்னர், ஒரு பல்கலைக்கழகத்துக்குரிய அடித்தளம் நன்கு அமைக்கப்பட்டு விட்டது. 1978இல் யாழ்ப்பாண வளாகம், முழுமையான யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக உயர்வு பெற்றது.

1978இல் கைலாசபதி அமெரிக்காவில் இருந்து திரும்பிய பின்னர், தமிழ்ப் பேராசிரியராகவும் கலைப்பீட அதிபராகவும் கடமை ஆற்றிக்கொண்டிருந்தபோது, 1982இல் திடீரென நோய்வாய்ப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது காலமானார்.


கைலாசபதி, இளவயதில் இறந்தபோதிலும், தமிழ் இலக்கிய உலகுக்கு மறக்க முடியாத பங்களிப்பைச் செய்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஓங்கி வளர்வதற்கு, அவர் இட்ட அடித்தளம் நினைவில் என்றும் இருக்கவேண்டியதாகும்.

---

கமலா வாசுகியின்

# 'கடந்து வந்த காலத்தை பார்த்தல்'

### மட்டக்களப்பில் இன்றுமுதல் ஐந்து தினங்கள் ஓவியக் கண்காட்சி




கே.எல்.ரி யுதாஜித்

மட்டக்களப்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளராகிய கமலா வாசுகியின் 'கடந்து வந்த காலத்தைப் பார்த்தல்' எனும் ஓவியங்களின் கண்காட்சி, இன்று புதன்கிழமை தொடக்கம் 10ஆம் திகதி வரை மட்டுநகர் லேடி மனிங் ட்றைவ் (கல்லடிப் பாலத்து இறக்கத்தில் புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு முன்னால் உள்ள வாவிக்கரை வீதி), இலக்கம் 55 முகவரியுடைய இல்லத்தில் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை நடைபெறவுள்ளது.

கமலா வாசுகி, 1966 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்து, அங்கேயே கல்வி கற்றவர். யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான இவர், 1989.02.02 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் தனது முதலாவது ஓவியக் கண்காட்சியை நடத்தியதிலிருந்து, இலங்கை தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க பெண்ணிலைவாத ஓவியக் கலைஞராகத் தன்னை வெளிக்காட்டிக்கொண்டார்.

> **பெண்ணிலைவாதச் சிந்தனைகளையும் அதற்குரிய வாழ்க்கை முறைகளையும் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினருடனும் பகிர்ந்தும் பரவலாக்கியும் கொள்வதற்கான ஊடகமாக, கலை இலக்கியங்களை இவர் கையாண்டு வருகிறார்**



இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தனியாகவும் மற்றும் பல ஓவியர்களுடன் இணைந்தும் தனது ஓவியங்களைக் காட்சிப்படுத்தியுள்ள இவர், 1995 இலிருந்து இற்றை வரைக்கும் மட்டுநகரைத் தளமாகக் கொண்டு இயங்கி வருகின்றார்.

பெண்ணிலைவாதச் சிந்தனைகளையும் அதற்குரிய வாழ்க்கை முறைகளையும் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினருடனும் பகிர்ந்தும் பரவலாக்கியும் கொள்வதற்கான ஊடகமாக, கலை இலக்கியங்களைக் கையாண்டு வரும் இவர், கடந்த மூன்று தசாப்தங்களாகத் தான் அனுபவித்த, எதிர்கொண்ட விடயங்களைப் பேசும் பொருட்டு, தனது ஓவியங்களின் கண்காட்சியை நடத்தவுள்ளார்.

> **நமது வெவ்வேறு வலிகளையும் ஆற்றுப்படுத்தல்களையும் நம்பிக்கைகளையும் உரையாடலுக்குக் கொண்டு வந்து, இனிவரும் காலத்துக்கான ஆக்கபூர்வமான வாழ்வியலை வடிவமைக்கும் ஆர்வத்துடனானது இக்கண்காட்சி!**

இலங்கை தீவின் வரலாற்றில் 1989 தொடக்கம் 2023 வரையான காலகட்டம் என்பது கவனத்துக்கு உரிய சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்ட தீர்க்கமான காலமாக அமைந்துள்ளது. இக்காலகட்டத்தில் ஒரு பெண்ணிலைவாத கலைச் செயற்பாட்டாளராக, தீவிரமாக இயங்கிய கமலா வாசுகி, தனது படைப்புகளூடாக இக்காலத்தின் வலிகளையும் ஆற்றுப்படுத்தல்களையும் நம்பிக்கைகளையும் பொதுவெளியில் பகிர்ந்து கொள்ள விளைகின்றார்.

இவ்வாறு, பலதளங்களில் கவனிப்புக்குரிய காட்சி வெளியாகக் கமலா வாசுகியின் 'கடந்து வந்த காலத்தைப் பார்த்தல்' எனும் தலைப்பிலான ஓவியக் காட்சி - 2023 நடைபெறவுள்ளது. நமது கடந்து போன காலத்தின் வெவ்வேறு வலிகளையும் ஆற்றுப்படுத்தல்களையும் நம்பிக்கைகளையும் உரையாடலுக்குக் கொண்டு வந்து, இனிவரும் காலத்துக்கான ஆக்கபூர்வமான வாழ்வியலை வடிவமைக்கும் ஆர்வத்துடன் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளார்.

# கருநாட்டுக்கேணி காணிகளில் சிங்கள குடியேற்றம்

## தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து, சிங்கள குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு 180 சிங்கள குடும்பங்களை குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஆகியவற்றை சேர்ந்த உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை (03) கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து, தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதன்போது, துரைராசா ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது: முல்லைத்தீவு மாவட்டத்தின் பூர்வீக எல்லைக் கிராமமான கருநாட்டுக்கேணியில், தமிழ் மக்களின் குடியிருப்பு காணிகளை ஆக்கிரமிப்புச் செய்து, அங்கு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளும் முயற்சிகள் தற்போது முனைப்புப் பெற்றுள்ளன.



இந்தப் பகுதிகளிலுள்ள காணிகள் அனைத்திலும், தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்ததுடன் 1973, 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் அவர்களுடைய கைகளில் இருக்கின்றன.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி எனப்படுகின்ற இந்த எல்லைக் கிராமங்கள் பூர்வீக பழந்தமிழ் கிராமங்களாகும். இங்கு வாழ்ந்த மக்கள், 1984ஆம் ஆண்டு, இந்தப் பகுதிகளிலிருந்து இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட பின்னர், தமிழ் மக்கள் நெற்செய்கைக்காக பயன்படுத்திய குளங்கள், அவற்றின் கீழான வயல் நிலங்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன. அந்தவகையில், உந்திராயன் குளம், மறிச்சுக்கட்டிக்குளம், ஆமையன்குளம் ஆகிய குளங்களையும் அவற்றின் கீழான வயல் நிலங்களையும் தற்போது சிங்களவர்களே பயன்படுத்தி வருகின்றார்கள்.

அத்தோடு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ்மக்கள் தமது மானாவாரி விவசாய நிலங்களில் பயிர்செய்கை செய்யும்போது, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களாலும் கூட இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள், பெரும்பான்மை இனத்தவர்களால் தாக்கப்படுவதும், தமிழர்களுடைய கால்நடைகள் திருடப்படுகின்ற சம்பவங்களும் ஒருபுறம் இடம்பெறுகின்றன.

இவ்வாறான சூழலில், தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளில் சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன. இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களை பாதுகாப்பதற்கு நாம் எந்த எல்லைக்கும் போகத் தயாராக உள்ளோம் என்றார்.

# வீடுக்கு தீ வைப்பு

■ செந்தூரன் பிரதீபன்

உருத்திரபுரம் பத்தாம் வாய்க்கால் பகுதியில் வீடொன்றின் மீது நேற்று முன்தினம் (03) தீ வைக்கப்பட்டுள்ளது. இந்த வருட முற்பகுதியில், பத்தாம் வாய்க்கால் பகுதியில் இளைஞன் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக, கொலை குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, சந்தேக நபரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் மனைவி மற்றும் அவரது குடும்பத்தினர் வேறோர் இடத்தில் தலைமறைவாகி வாழ்ந்து வரும் நிலையில், வீடு இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

> **“கொலை குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, சந்தேக நபரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது**



# கௌதாரி முனையில் நில அளவீடுக்கு மக்கள் எதிர்ப்பு

### ‘நாங்கள் வாழவும் மேய்ச்சல் தரவைக்கும் காணிகள் இல்லாத நிலையில் இறால் வளர்ப்புக்கு வழங்க முடியாது”

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



பூநகரி, கௌதாரிமுனை பகுதியில் 98 ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் நோக்கில், நில அளவீடு மேற்கொள்வதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கௌதாரி முனை கிராம அலுவலர் பிரிவில், இறால் வளர்ப்பு திட்டத்துக்கு 98 ஏக்கர் காணியை தனியார் ஒருவருக்கு வழங்கும் நோக்கில், நேற்று (04) நில அளவீடு செய்ய முற்பட்டபோது, நில அளவீட்டுப் பணிகள் பொது மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மை, 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி வாழுதல் என பல்வேறு காணித் தேவைகள் உள்ளபோதும், தனியாருக்கு சொந்தமான காணிகளையும் அரச காணிகளையும் உள்ளடக்கியதாக சுமார் 98 ஏக்கர் காணியை தனியாருக்கு வழங்கும் நோக்கில் நில அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில், குறித்த அளவீட்டுப்பணிகள் தடுக்கப்பட்டு உள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் த. அகிலன், சம்பவ இடத்துக்குச் சென்று, பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன் இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து

# யாழ், மாநகர சபை வெளியேற இடைக்கால தடை

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ், மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேற பணித்தமைக்கு எதிராக, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இடைக்கால கட்டளை விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று (04) விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவிட்டது.

வடக்கு மாகாண ஆளுநர், நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபையை வெளியேற பணித்ததுடன், அதை புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ. பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயரும் சட்டத்தரணியுமான வி. மணிவண்ணன் ஆஜராகியிருந்த போதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் இந்த இடைக்காலக் கட்டளையை பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு, ஏப்ரல் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

# றமழான் நிகழ்வுகளை விரைவாக நடைமுறைப்படுத்த ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

■ ஏ.எச்.ஏ ஹூஸைன்

கல்வி அமைச்சின் றமழான் மாத வழிகாட்டல் நிகழ்வுகளை, றமழான் நோன்பு முடிவடைவதற்கு இடையில் நடைமுறைப்படுத்துமாறு, மட்டக்களப்பு மத்தி. கல்வி வலயத்திடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு கிளை முஸ்லிம் பிரிவின் செயலாளர் றமழான் றிக்கினாஸ் தெரிவித்தார். கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளை, றமழான் மாதத்தை வினைதிறன் மிக்கதாக்குவதற்கான வழிகாட்டல் கடிதத்தை சகல முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பியுள்ளது.

கல்வி அமைச்சு, சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் பொருத்தமான தினமொன்றில் நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்வை ஏற்பாடு செய்வது பொருந்தமானதாக கூறியுள்ளது. அத்துடன், அந்த நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவ உறுப்பினர்களையும் பங்குபற்றச் செய்து இந்நிகழ்வை திறம்பட மேற்கொள்ளுமாறும் வேண்டியுள்ளது.

# நிர்வாக அதிகாரியாக பதவி உயர்வு

■ வி.ரி சகாதேவராஜா



அம்பாறை மாவட்டத்தில் இம்முறை வெளியான முகாமைத்துவ உதவியாளர் ‘சூப்பரா’ பரீட்சையில், ஒரேயோரு தமிழ் உத்தியோகத்தர் மாத்திரம் தெரிவாகி இருக்கின்றார்.

காரைதீவு பிரதேச செயலகத்தின் நிதி உதவியாளராக பணியாற்றும் ஆர். கணேசமூர்த்தி இவ்வாறு ‘சூப்பரா’ பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த கணேசமூர்த்தி, முன்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பதில் நிர்வாக உத்தியோகத்தராக பல வருடங்கள் சேவையாற்றி வந்தார்.

# இந்து கலைஞர்களின் விவரங்கள் திரட்டும் பணி

■ வி.ரி சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாவட்ட செயலகம் இணைந்து, அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து கலைஞர்கள் தொடர்பான விவரங்களை திரட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

இதன் முதலாவது கூட்டம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலைஞர்களின் விவரங்கள், கலைஞர்களின் ஆக்கங்கள், கலைஞர்கள் பெற்ற விருதுகள் தொடர்பான விவரங்கள், சமூகத்தில் கலைஞர்களின் பங்களிப்பு போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, சம்மாந்துறை இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கௌசல்யவாணி, காரைதீவு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி சி. சிவலோஜினி, கல்முனை வடக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி க. சுஜித்திரா, நிந்தவூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி பா. சுஜிவனி, உட்பட காரைதீவு, கல்முனை வடக்கு, சம்மாந்துறை கலஞர்கள் கலந்து கொண்டனர்.

### மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரை:

# பாதைகளுக்கு மும்மொழிகளில் பெயர்ப் பலகைகள்

■ பாறுக் ஷிஹான்

பாதைகளின் பெயர்கள் மும்மொழிகளில் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகைகளை பொருத்தும் நடவடிக்கையை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய மருதமுனை, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டாளைச்சேனை போன்ற பகுதிகளுக்கு முதல் கட்டமாகவும் பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில், லகுகல பகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாகவும் பாதைகளின் பெயர் மும்மொழிகளில் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகைகளை பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக வீதி அபிவிருத்தி திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார்.




### ஹிங்குரானை குழுவால்

# இறக்காமம் ஹோட்டல் தாக்குதல்

■ நூருள் ஹுதா உமர்

அம்பாறை நகருக்கு அண்மையில் அமைந்துள்ள இறக்காமம், வரிப்பதான்சேனையிலுள்ள ‘சலாமத்’ ஹோட்டல், குழுவொன்றால் தாக்கி சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

ஹிங்குரானை பகுதியைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குழு, நேற்று முன்தினம் (03) இரவு, ஹோட்டலில் உள்ள விலை மதிப்புள்ள பொருட்களைத் தாக்கி சேதம் விளைவித்துள்ளது. இதைத் தடுத்து நிறுத்த முயன்ற ஹோட்டல் உரிமையாளரும் தாக்குதலுக்கு உள்ளானார். அதைத் தொடர்ந்து



ஹோட்டலின் உரிமையாளர் உட்பட தாக்கிய குழுவைச் சேர்ந்த இருவரும் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் பலி

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



சந்திவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாஸ்திரியார் வீதி, முறக்கொட்டான்சேனையை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகராசா யோகேந்திரன் (42) என்பவர் நேற்று முன்தினம் (03) இரவு ரயிலில் மோதுண்டு மரணமானார்.

மீன் வியாபாரத்தில் ஈடுபடும் இவர், மாலையில் வீடுவரும்போது மது போதையுடன் வந்து, இரவு நேரத்தில் தனது வீட்டுக்கு முன்பாகவுள்ள ரயில் பாதையில் சற்று நேரம் இருந்துவிட்டே, படுக்கைக்கு செல்வதை வழக்கமாக் கொண்டவராவார்.

சம்பவ தினம் அன்று, எட்டு மணியளவில் அதிகரித்த போதையுடன், குறித்த ரயில் பாதையில் அமர்ந்திருந்த போது, மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் ரயில் இரவு 08.45 மணியளவில் அப்பாதையால் வருவதை கண்டு, எழுந்து செல்ல முயன்றபோதும், அதிக போதை காரணமாக, எழுந்திருக்க முடியாத நிலையில், அவ்விடத்திலேயே ரயிலில் மோதுண்டு தலைப்பகுதி பலமாக தாக்குண்டு மரணமானார்.

# திருக்கோணேஸ்வர ஆலய பிரம்மோற்சவம்

■ அ. அச்சுதன்

திருக்கோணேஸ்வரப் பெருமானின் பிரம்மோற்சவம் இன்று (05) காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 21.04.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும் 22.04.2023 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்தோற்சவமும் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 24.04.2023 திங்கட்கிழமை மாலை 05.30 மணிக்கு தெற்ப உற்சவமும் நடைபெறவுள்ளது.

மஹோற்சவ காலங்களில் அபிஷேகம் காலை 08:00 மணி, மாலை 03.30 மணிக்கும் நடைபெறும். பூசை காலை 09:00 மணிக்கும் மாலை 04.30 மணிக்கும் கொடித்தம்ப பூசை காலை 10:00 மணிக்கும் மாலை 05:00 மணிக்கும் வசந்த மண்டப பூசை காலை 11:00 மணிக்கும் மாலை 06:00 மணிக்கும் நடைபெறும்.

# குண்டசாலையில் 30,000 குடும்பங்கள் ‘வறண்டன’

■ மொஹொமட் ஆஸிக்

மகாவலி கங்கையின் நீர் மிகவும் வற்றி, நிலம் வறண்டு காணப்படுவதால் குண்டசாலை நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீரை பெற்றுக்கொள்ளும் சுமார் 30,000 குடும்பங்கள் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மகாவலி ஆற்றின் ஊடாக விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குச் செல்லும் நீர், பல்லேகல பிரதேசத்தில் வழிமறித்து சுத்திகரிப்பு செய்யப்பட்டு குண்டசாலை, பலகொல்ல, திகன, வாரபிட்டிய உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் உள்ள சுமார் 30,000 குடும்பங்களுக்கு குடிநீராக வழங்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மகாவலி கங்கையின் நீர் வெகுவாகக் குறைந்துள்ளதாலும், சில பகுதிகளில் தொடர்ச்சியாக ஐந்தாறு நாள்களுக்கு நீர் நிறுத்தப்படுத்தப்படும் அளவுக்கு குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாக அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல்லேகல முதலீட்டு வலயம், மத்திய மாகாண சபை வளாகம், தும்பற திறந்த சிறைச்சாலை, ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் அங்குள்ள முக்கிய இடங்கள் உட்பட பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குண்டசாலை நீர்த்திட்டத்தின் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேச மக்கள், பலகொல்லயில் மட்டும் 1,500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், தொடர்ந்து ஐந்து நாள்களாக தண்ணீர் வராததால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவித்தனர். நோன்பு காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை மிகவும் சிரமமாக இருப்பதாகவும், தண்ணீர் கிடைக்க வேறு மாற்று வழிகள் இல்லை என்றும் கூறுகின்றனர். எனவே, தங்களுக்கு விரைவில் தடையில்லா குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இதுதொடர்பில் குண்டசாலை நீர்த் திட்ட முகாமையாளர் மற்றும் நீர்த் திட்ட பொறியியலாளர் எச்.பி.கே.எஸ் பத்திரணவிடம் கேட்கப்பட்டபோது, “குண்டசாலை நீர்த்திட்டத்தின் மூலம் 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 150,000 பேருக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. மகாவலி ஆறு வரண்டு கிடப்பதால், இந்நாள்களில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு பல மாற்று திட்டங்கள் முன்வைக்கப்பட்டு உள்ளது” என்று அவர் கூறினார். எவ்வாறாயினும், நீர் தடைப்படும் பகுதிகளுக்கு பௌசர்கள் மூலம் தற்காலிகமாக நீர் வழங்கப்படுவதாகவும் அதற்காக பெருமளவு செலவுகளை மேற்கொள்ள வேண்டி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பெகோ இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு மகாவலி ஆற்றில் படிந்துள்ள சேற்று மண்ணை அகற்றுவதற்கும், நீரை தேக்கி வைத்து, ‘பம்பிங்’ நிலையங்களுக்கு ஓரளவு தண்ணீர்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

# பாரத் அருள்சாமி, காந்தி சௌந்தராஜன் நியமனம்



■ எஸ். கே. குமார்

சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக காந்தி சௌந்தராஜன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக அரசியல், தொழிற்சங்க, சமூக, சர்வதேச செயற்பாட்டாளரான பாரத் அருள்சாமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், திங்கட்கிழமை (03) வழங்கி வைக்கப்பட்டன.

காந்தி சௌந்தராஜன் இதற்கு முன்னர் பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அதிகார சபையின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவராகவும் பாரத் அருள்சாமி பதவி வகிக்கின்றார். அக்கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாளராகவும் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலை கொமர்சலில் அன்னங்கள் மிதக்கின்றன



■ எஸ். கே. குமார்

கொட்டகலை பிரதேச சபையின் கீழுள்ள கொமர்சல் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் நீர்த் தேக்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள், 2014ஆம் ஆண்டு அமரர் ஆறுமுகன் தொண்டமானால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர், நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டில் அத்திட்டம் 2021 மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான வேண்டுகோளை, நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் மருத பாண்டி ராமேஸ்வரன், கொட்டகலை பிரதேச சபையின்



தலைவர் ராஜாமணி பிரசாந்த் ஆகியோர் விடுத்திருந்தனர்.

இதன் முதற்கட்ட நிகழ்வாக படகு சேவை அமைச்சர் ஜீவன் தொண்டமானால் நேற்று (04) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது, கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ராஜாமணி பிரசாந்த், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இளைஞர் அணி பொதுச் செயலாளர் அர்ஜூன் ஜெய்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் விலங்கு பண்ணைக்கு எதிர்ப்பு

## மரக்கறிகளை பயிரிட காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கை





■ ரஞ்சித் ராஜபக்ஷ

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள நாவலப்பிட்டி, நாகஸ்தென்ன தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் அந்தத் தோட்ட முகாமையாளருக்கு எதிராக, கறுப்பு கொடிகளை ஏந்தியவாறு, திங்கட்கிழமை (03) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தத் தோட்டத்தின் முகாமையாளரால், மரக்கறிகளை பயிர்செய்வதற்காக, தொழிலாளர்களுக்கு ஓர் ஏக்கர் வீதம் தற்காலிகமாக காணிகள் வழங்கப்பட்டிருந்தன. அந்தக் காணிகளை மீளவும் பொறுப்பேற்றுக்கொண்ட முகாமையாளர், அந்தக் காணிகளை தனியார் விலங்கு பண்ணைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த காணியில் மரக்கறிகளை பயிர்செய்து, மேலதிக வருமானத்தை நாங்கள் பெற்றுக்கொண்டோம். அவ்வாறான காணிகளை மீளவும் தோட்ட நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டமையால் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் நாவலப்பிட்டியில் செயற்படும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்துகொண்டனர்.

அந்தத் தோட்டத்தில் 1,600 ஏக்கர் காணி உள்ளது. அதில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய இடங்களை தோட்டத் தொழிலாளர்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். எஞ்சிய காணியை தனியார் விலங்கு பண்ணைக்கு வழங்குவதாயின் தாங்கள் எவ்விதமான எதிர்ப்புகளையும் தெரிவிக்கமாட்டோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், பேரணியாகச் சென்று மகஜரையும் கையளித்தனர். அத்துடன், காணிகளை தனியார் விலங்கு பண்ணைக்கு வழங்குவதற்கு மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதற்கு எதிராக பாரிய நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்வோம் என்றும் எச்சரித்தனர்.

# நண்பனின் காதலி துஷ்பிரயோகம்

■ சுமணசிறி குணத்திலக்க

17 வயதான சிறுமி, அவருடைய காதலனின் நண்பனால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம், மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்தச் சிறுமி, தன்னுடைய காதலனின் வீட்டுக்கு கடந்த மூன்றாம் திகதி சென்றுள்ளார். அன்று, அவசர வேலை நிமிர்த்தம் வீட்டை விட்டு காதலன் வெளியே சென்றிருந்தார்.

அப்போது, அங்கு வந்த காதலனின் நண்பன், தனது நண்பன் தொடர்பில் விசாரித்துள்ளார். அவர் வெளியே சென்றுள்ளார் என சிறுமி கூற, புகைப்பொருளை பற்றவைப்பதற்காக நெருப்பை கேட்டுள்ளார்.

அந்த சிறுமியும் தீப்பெட்டியை எடுப்பதற்காக வீட்டுக்குள் சென்றபோது, பின்னால் சென்ற அந்தநபர், அச்சிறுமியின் வாயை பொத்தி, வீட்டுக்குள்ளேயே தள்ளிக்கொண்டு சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

> **“ புகைப்பொருளை பற்றவைப்பதற்காக நெருப்பை கேட்டுள்ளார். அந்த சிறுமியும் தீப்பெட்டியை எடுப்பதற்காக வீட்டுக்குள் சென்றபோது, பின்னால் சென்ற அந்தநபர், அச்சிறுமியின் வாயை பொத்தி, வீட்டுக்குள்ளேயே தள்ளிக்கொண்டு சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்**

தனக்கு நேர்ந்தவற்றை அச்சிறுமி தன்னுடைய மாமியிடம் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இனங்காணப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# பன்விலவுக்கு ஓர் அறிவிப்பு

■ மெய்யன்

கண்டி, பன்வில பொலிஸ் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால், அவை தொடர்பில் பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டுமென பன்விலை பொலிஸார் பொதுமக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பொன்றை விடுத்துள்ளனர்.

பொது மக்கள் தங்கள் வீடுகளில் வைத்துள்ள தங்க நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள், பணம் போன்றவற்றை பத்திரமாக வைத்திருக்க வேண்டுமென ஒலிபெருக்கி மூலம் பகிரங்கமாக பொலிஸார் அறிவிப்பு விடுக்கின்றனர்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில், பிரதேசங்களுக்கு சென்று பகிரங்க அறிவிப்பை பொலிஸார் விடுக்கின்றனர்.

# சு.க அமைப்பாளர்கள் ஐவர் நியமனம்

■ எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்டத்திலுள்ள நுவரெலியா, மஸ்கெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த ஆகிய ஐந்து பிரதேச செயலக பிரிவுகளுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராமச்சந்திரன் விஜயகுமார், சிவசாமி பத்மநாதன், முஹமட் மக்கீம், முஹமட் மசூர், இராசையா ரஜனிகாந்த், ரத்தன தேரர் ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமன கடிதங்களை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதிகளின் குழுத்தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் ஆகியோர் திங்கட்கிழமை (03) வழங்கினர்.




# வருடாந்த பரிசளிப்பு விழா

■ செ.தி.பெருமாள்

சாமிமலை, மாநெலி பகுதியில் இயங்கும் சக்சஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு, பாடசாலையின் நிர்வாக பொருப்பாளர் எம். சிவாவின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் (பாரதி த.வி, கவிரவல. த.வி, மோர்ட்டின் கேம் த.வி) அதிபர்கள், ஆசிரியர்கள் சமூக செயற்பாட்டார்கள் நலன்விரும்பிகள் பெற்றோர்கள் என பலரும் பங்கு பற்றினர்.

இந்தப் பாலர் பாடசாலையில் பயின்றுவிட்டு, அரச பாடசாலைக்கு தரம் ஒன்றுக்கு செல்கின்ற 23 மாணவர்களுக்கு நினைவு பரிசு, கற்றல் உபகரணங்கள், சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# ‘சாமி’ வரம் கொடுத்திருந்தாலும் இடையூறாக இருக்கும் ‘பூசாரி’கள்

மார்ச் மாதம் ஆரம்பம் முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் வலுப்பெற்றுள்ள நிலையில், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் குறைப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிகின்றது.

கோதுமை மா, சீனி, பருப்பு மற்றும் இறக்குமதி செய்யப்படும் பால் மா போன்ற இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள், குறைக்கப்பட்டு உள்ளதாக மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் எரிபொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து பஸ், பாடசாலை மாணவர் வாகனங்கள், வாடகை வாகனம் என்பவற்றின் கட்டணங்களிலும் குறைப்பு செய்யப்பட்டிருந்தன.

அத்துடன், மரக்கறி வகைகளும் வெகுவாக குறைவடைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கொழும்பில், பொதுவாக ஒரு கிலோ கிராம் மரக்கறியின் விலை 120 ரூபாய் முதல் 160 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இன்று முதல் எரிவாயுவின் விலையும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், முட்டைக்கு நிலவிய தட்டுப்பாடும் தற்போது நீங்கியுள்ளது.

பண்டிகைக் காலம் என்பதால், பொது மக்கள் தமது பொருட் கொள்வனவில் பெரிதும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, சகல இனத்தவர்களின் பண்டிகைகளும் இம்மாதம் அனுஷ்டிக்கப்படுவதால், தத்தமது பண்டிகைகளுக்கு அவசியமான பொருட் கொள்வனவில் அனைவரும் ஈடுபடுவதை கொழும்பின் சனநெரிசல் நிறைந்த பகுதிகளில் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு விலைக்குறைப்புகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், உணவகங்களில் உணவுப் பொருட்களுக்கான விலைகள் இதுவரையிலும் குறைக்கப்படவில்லை. பால்தேநீர் விலை 100 ரூபாயாக குறைக்கப்படுவதாக உணவகங்கள் சங்கத்தால் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. ஆனாலும், இதர பேக்கரி உற்பத்திப் பொருட்கள் மற்றும் கோதுமை மாவால் தயாரிக்கப்படும் உணவுகளின் விலைகள் இதுவரையில் குறைக்கப்படவில்லை.

மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் போது, மறுதினமே இந்த உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படும் நிலையில், விலைக் குறைப்புகள் ஏற்படுத்தப்பட்டு சில தினங்கள் கடந்துவிட்ட நிலையிலும், உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலைகளில் விலைக்குறைப்பு ஏற்படுத்தப்படவில்லை என்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமானதாகும். குறிப்பாக கொழும்பு மற்றும் நகர்ப் பகுதிகளில் பணியாற்றுவோர் மற்றும் பணி நிமித்தம் தற்காலிகமாக தங்கியிருப்போர், பெரும்பாலும் தமது நாளாந்த உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு உணவகங்களில் தங்கியுள்ளனர்.

வாழ்க்கைச் செலவில் உணவுக்கான செலவும் பெரும் பங்களிப்புச் செலுத்துகின்றது. இந்நிலையில், விலைக் குறைப்பின் அனுகூலம், நுகர்வோரை சென்றடையாவிடின், அந்த விலைக்குறைப்பின் அனுகூலம் வியாபாரிகளையே சேரும். இதனால், இவ்வாறானதொரு விலைக்குறைப்பால் தேசிய பொருளாதாரத்துக்கும் பயன் இருக்காது என்பதை, அனைவரும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்:

# ‘பிச்சை வேண்டாம் நாயைப் பிடி



எம்.எஸ்.எம் ஐயூப்

சர்வதேச ரீதியாக விமர்சிக்கப்பட்டு வந்த பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, அரசாங்கம் கொண்டு வரப்போகும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக, ஏற்கெனவே தெற்கிலும் வடக்கிலும் சர்வதேச ரீதியாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. சிலர், தற்போது அமலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பார்க்கிலும், புதிய சட்டம் மோசமானது எனக் கூறுகின்றனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் வற்புறுத்தலாலேயே, அரசாங்கம் தற்போது அமலில் உள்ள சட்டத்துக்குப் பதிலாக, புதிய சட்டம் ஒன்றை வரைந்துள்ளது. இலங்கைக்கு தொடர்ந்தும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகை வழங்குவதற்கு, பயங்கரவாத தடைச் சட்டம் தடையாக அமையலாம் என, 2021ஆம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்றம் சூசகமாகக் குறிப்பிட்டு இருந்தது.

தற்போது அமலில் உள்ள சட்டத்தின் கீழ், சந்தேக நபர்களை நீண்ட காலம் தடுத்து வைத்திருக்க முடியும். “சில தமிழ் கைதிகள், வழக்குகள் தாக்கல் செய்யப்படாமலேயே பல தசாப்தங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்” என நாமல் ராஜபக்ஷவே, 2021ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கூறினார். அதேவேளை, அந்தச் சட்டத்தின் கீழ், சந்தேக நபர் ஒருவர் சித்திரவதை போன்ற நிர்ப்பந்தங்கள் காரணமாக வழங்கப்படும் ஒரு வாக்குமூலத்தை, அவருக்கு எதிரான சாட்சியமாக பாவிக்க முடியும்.

இதுபோன்ற மிகவும் மோசமான மற்றும் அநீதியான வாசகங்கள், அந்தச் சட்டத்தில் அடங்கி இருந்தமையால், அதை இரத்துச் செய்து சர்வதேச தரத்துக்கு அமைவாக புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் அரசாங்கத்தை வற்புறுத்தின.

இதன் பிரகாரம், ‘நல்லாட்சி’ அரசாங்கம் ஒரு புதிய சட்டமூலத்தை தயாரித்தது. ஆனால், வெளிநாட்டு சக்திகளின் நிர்ப்பந்தத்தால் உள்நாட்டில் சட்டம் அமைக்க முடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம், அதை 2020 ஆம் ஆண்டு இரத்துச் செய்தது. அதையடுத்து பயங்கரவாத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற சர்வதேச நெருக்குதல் மீண்டும் அதிகரித்தது.

அரசாங்கத்துக்கு எதிராக, தமிழ் ஆயுதக் குழுக்கள் பல, வடக்கில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையில், 1978ஆம் ஆண்டு அப்போது பதவியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், ‘தமிழீழ விடுதலை புலிகள் மற்றும் அதுபோன்ற அமைப்புகளைத் தடை செய்யும் சட்டம்’ என்ற பெயரால் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

பின்னர் அதற்குப் பதிலாக, 1979ஆம் ஆண்டு தற்போது அமலில் உள்ள பயங்கரவாத தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நிறைவேற்றியது.

இப்போது, வடக்கிலோ தெற்கிலோ ஆயுதக்குழுக்கள் இல்லை. ஆனால், வடக்கிலும் தெற்கிலும் நடைபெற்று வரும் பல்வேறு போராட்டங்கள், அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளன. எனவே, அவற்றைத் தடுப்பதற்காக புதிய சட்டத்தை, அரசாங்கம் பாவிக்கப் போவதாகத் தெரிகிறது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் அரச படைகளால் கைப்பற்றப்பட்டு இருக்கும் தமது காணிகளை விடுவிக்குமாறும் காணாமலாக்கப்பட்டோரை தேடித்தருமாறும் கோரி, வடக்கில் பல வருடங்களாக ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்ற போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேபோல் தெற்கே பொருளாதார காரணங்களை முன்வைத்து போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு உதவும் நோக்கத்துடன் சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை அரசாங்கத்துக்கு விதித்துள்ளது. அவற்றின்படி, அரசாங்கம் அண்மையில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் மாத வருமானம் பெறுவோரிடம் இருந்து, வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கை மின்சார சபை, ஸ்ரீ லங்கன் விமான சேவை போன்ற பல அரச நிறுவனங்களை, தனியாரிடம் கையளிக்க உள்ளது. மின் கட்டணம், மின்சார சபையின் செலவுக்கேற்ப அதிகரிக்கப்பட உள்ளது. இவற்றுக்கு எதிராக, தொழிற்சங்கங்கள் தற்போது போராட முன்வந்துள்ளன. இந்த நிலையில் தான், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

இச்சட்ட மூலம், மார்ச் 22ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அது, 97 பக்கங்களைக் கொண்ட மிக நீளமான சட்ட வரைவாகும். எனவே, பலர் அதை இன்னமும் வாசிக்காததாலோ என்னவோ, அது பெரிதாக ஊடகங்களில் அலசப்படவில்லை. இதுவரை, சர்வதேச நீதித்துறையினர் ஆணையகம் மட்டும், சற்று விளக்கமான விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

பழைய சட்டத்தோடு ஒப்பிடுகையில், புதிய சட்டத்தில் பல முன்னேற்றகரமான வாசகங்கள் இருந்த போதிலும், ஆர்ப்பாட்டங்கள், கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தல் (Dissents) போன்றவற்றை முறியடிப்பதற்கு, புதிய சட்டமூலம் வழிவகுத்து உள்ளதாக சர்வதேச நீதித்துறை ஆணையகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பயங்கரவாத செயல்களாக, இச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை, மயக்கத்தை தருகின்றன. அவ்வாறான நடவடிக்கைகள் பட்டியலொன்றும் அதில் உள்ளது. அதேவேளை, பயங்கரவாத செயல்களாவதற்கு அவை, சில நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று, நோக்கங்கள் பட்டியலும் வழங்கப்பட்டுள்ளது.

‘ஒரு செயலை செய்யுமாறோ அல்லது செய்யாது விடுமாறோ, இலங்கை அரசாங்கத்தையோ பிறிதோர் அரசாங்கத்தையோ சர்வதேச நிறுவனத்தையோ, தவறான முறையில் அல்லது சட்ட விரோதமாக நிர்ப்பந்திக்கும் நோக்கத்துடன்...’ என்று ஒரு வாசகம் அந்த நோக்கங்கள் பட்டியலில் உள்ளது.

அத்தோடு, இந்த நோக்கத்துடன் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தல் அல்லது, போக்குவரத்துக்கு இடையுறு ஏற்படுத்தல் போன்றவை பயங்கரவாத செயலாக கருதப்படும். எனவே, இச்சட்டத்தில் பயங்கரவாத செயல்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு குறிப்பிடப்படவில்லை என சர்வதேச நீதித்துறை ஆணையகம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதாவது, வடக்கில் காணிகளை விடுவிக்குமாறோ, மின் கட்டனத்தை குறைக்குமாறோ ‘தவறான முறையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நோக்கத்துடன்...’ மக்கள் வீதிகளில் இறங்கி, அது போக்குவரத்துக்கு இடையுறாக அமைந்தால் அல்லது வேலை நிறுத்தம் செய்தால், அது பயங்கரவாத செயலாக கருதப்படும். இங்கே, ‘தவறான முறையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நோக்கத்துடன்...’ என்னும் போது, அது தவறான முறையிலானது என்பதை, யார் தீர்மானிப்பது என்பது தெளிவாகவில்லை.

தொழிற்சங்கங்களோ, அரசியல் கட்சிகளோ, மற்றோர் அமைப்போ அரசாங்கத்திடம் ஏதாவது கோருவதாக இருந்தால், அதைத் தவறான முறையில் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நோக்குடனான செயலாக, இதன்படி கருதலாம்.

இவ்வாறான நோக்கத்துடன் ஒரு கொலையை செய்தால், அதற்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று இச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொலைக்கு மரண தண்டனை என்பது தண்டனைக் கோவையில் இருக்கிறது. மரண தண்டனையை நிராகரிக்கும் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த வரையப்பட்ட இந்தச் சட்டமூலத்திலும் அது உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு கட்டளையை மீறுவதும், குற்றமாக இச்சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது, தற்போதைய அரசாங்கத்தாலும் எதிர்காலத்தில் வரப்போகும் அரசாங்கங்களாலும் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடிய வாசகமாகும் என சர்வதேச நீதித்துறை ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

புதிய சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கும் பயங்கரவாத செயலொன்றுக்காக, ஒருவருக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 இலட்சத்துக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படும். அவரது சொத்துகள் பறிமுதல் செய்யுமாறு மேல்நீதிமன்றம் உத்தரவிடலாம். இச்சட்டத்தில் குறிப்பிடப்படும் பயங்கரவாத செயலைச் செய்ய முயன்றவருக்கு, 15 வருட கடூழிய சிறைத்தண்டனையும் ஐந்து இலட்சத்து மேற்படாத அபராதமும் விதிக்கப்படும்.

ஆர்ப்பாட்டங்களும் பயங்கரவாத செயலாக கருதப்படும் அபாயம் இருக்கும் நிலையில், அவ்வாறான செயலொன்றுக்கு மக்களை தூண்டும் வகையில் ஒரு கருத்தை ஊடகங்கள் மூலமாகவோ வேறு விதமாகவோ வெளியிட்டால் அதுவும் குற்றச் செயலாகவே கருதப்படும். நாம் பேசுவதாலோ பத்திரிகையில் எழுதுவதாலோ எதையாவது செய்யவோ அல்லது செய்யாமலிருக்கவோ மற்றொருவரை தூண்டுகிறோமா என்பது தெளிவில்லாத சிக்கலான விடயமாகும்.

அவ்வாறு மற்றொருவர் தூண்டப்படுவாரா என்பதை, முதலில் பொலிஸாரே தீர்மானிக்கப் போகின்றனர். இதுபோன்ற குற்றச்சாட்டுக்காகக் கைது செய்யப்படாமல் இருப்பதென்றால், நாட்டில் எது நடந்தாலும் தம்பாட்டில் இருக்க வேண்டும்.

கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்புக்கு, பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பார்க்கிலும் இச்சட்டத்தால் சில உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒருவர் கைது செய்யப்பட்டால் பொலிஸாரோ படையினரோ அதை, 24 மணித்தியாலத்துக்குள் அவரது குடும்பத்தினருக்கு அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தலின் பிரதி, சந்தேகநபரிடமும் வழங்கப்பட வேண்டும்.

கைது செய்பவர், கைது செய்யப்படுபவரிடம் தம்மை அறிமுகப்படுத்த வேண்டும். அவரது குற்றத்தை விளக்க வேண்டும். சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற முடியும் என்பதையும் அவரிடம் தெரிவிக்க வேண்டும். கைது இடம்பெற்று 24 மணித்தியாலத்துக்குள் கைதைப் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும். இச்சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் உள்ளவர்களை நீதிவான் ஒருவர் வாரந்தோறும் சந்தித்து உரையாட வேண்டும்.

இவை நல்ல ஏற்பாடுகள் தான். ஆனால் இவற்றின் சிலவற்றின் நடைமுறை சாத்தியப்பாட்டை சர்வதேச நீதித்துறை ஆணையகம் சந்தேகிக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

சத்தம் போடாத காதல் சுத்தமானது; எத்திக்கில் இருந்தாலும் கைக்கு எட்டும் தூரத்தில்தான் காதலர்கள்!

அழகிய காதல் ஆரோக்கியமானது; பரபரக்கும் காதல், சலனக்காதல்; பாதி வழியில் தடம்மாறிப் போகும் வாய்ப்புகள் உண்டு.

உண்மைக் காதல் எனச் சொல்லி, காலப்போக்கில் காதலர்கள் அதைக் கலைத்து விடுவார்கள். அதன் அடுத்த கட்டமாக, புதுக் காதலைத் தேடும் நபர்கள் ஏராளம்.

உயிர் இருந்தும் அன்பு, காதல், விசுவாசம், இரக்கம், பரிவு இல்லாத நபர்கள், காதலை காமத்துடன் மட்டுமே நோக்குவார்கள். இவர்கள், தம்மிஷ்டத்துக்கு வாழ்வதே மகிழ்ச்சியும் திருப்தியும் என நம்பி, முடிவில் தேகத்தில், அறிவில் நிம்மதியைத் தொலைத்து, நடைப்பிணங்களாக வாழ்ந்துகொண்டு இருப்பவர்களைக் கண்டிருப்பீர்கள். சமூகம் இவர்களை மதிப்பதில்லை.

ஆண், பெண்ணை ஏமாற்றுவதும், பெண் ஆணை ஏமாற்றுவதும் சகஜமாகி விட்டன. இத்தகையோருக்கு அன்பு நிலை ஒத்துவராது. காலப்போக்கில் விரக்தியுடனேயே வாழ்வார்கள். இதுவே அவர்களின் வாழ்க்கையின் முடிவும் ஆகின்றது. செய்த பாவம் தொலையாத சோகம்.

ஒழுக்கம் அற்றவர்கள், அழுக்கை வலிந்து சுமந்து கொண்டு, நிரந்தரமாக துன்பங்களுடன் சீவிக்கின்றார்கள். சிற்றின்பம் அற்பமானது; அழிந்துவிடும். அற்ப நடத்தைகள், நரக வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சம்மாந்துறை:

## கல்லரிச்சல் பிரதேச வடிகான்களை துப்புரவு செய்ய வேண்டுகோள்

சம்மாந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட கல்லரிச்சல் பிரதேசத்திலுள்ள வடிகான்கள், நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமல் காணப்படுவதால், அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் சுகாதார ரீதியாக பாரிய அசௌகரியங்களையும் சீர்கேடுகளையும் எதிர்கொண்டு வருதவாகத் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை பிரதேச வடிகான்கள், நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாததால், குப்பைகள் அடைத்து, நீர் தேங்கி நிற்பதால், துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இப்பிரதேச மக்களின் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வடிகான்களைத் துப்புரவு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எம்.சி அன்சார்



சத்ரா

# 5 நக்ஸலைட்டுகள் சுட்டுக்கொலை

ஜார்க்கண்டில் பொலிஸார் நடத்திய என்கவுன்ட்டரில் நக்ஸல் அமைப்பைச் சேர்ந்த 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து இரண்டு ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சத்ரா பகுதியில் நக்ஸல்கள் அமைப்பைச் சேர்ந்த பலர் பதுங்கி உள்ளதாக ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பொலிஸார் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது நடத்தப்பட்ட என்கவுன்ட்டரில் நக்ஸல் அமைப்பைச் சேர்ந்த 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



அவர்களில் இருவரது தலைக்கு தலா ரூ.25 லட்சம், மற்ற இருவரது தலைக்கு தலா ரூ.5 லட்சம் வெகுமதி பொலிஸாரினால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சென்னை

# விமானத்தில் சில்மிஷம்: நடிகை கொடுத்த ஷாக்

'பாக்கியலட்சுமி' சீரியலில் போல்டான கேரக்டரில் நடித்துள்ள திவ்யா கணேஷ், விமானத்தில் பயணம் செய்த போது அவரது இடுப்பில் கைவைத்து சில்சிஷம் செய்த நபரின் கன்னத்தில் அறைந்த சம்பவம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



இவர் ரசிகர்களை நேரில் சந்தித்த போது ஒரு விஷயத்தைப் பகிர்ந்திருந்தார். அப்போது அவர் கூறுகையில்," தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் இருந்து சென்னைக்கு இரவு விமானத்தில் பயணம் செய்தேன். அப்போது இடுப்பு பகுதியில் ஏதோ ஓடுவது போன்று தெரிந்துள்ளது. என்னவென்று பார்த்த போது எதுவும் இல்லை. ஆனால், மீண்டும் அதே போல உணர்வு ஏற்பட்டது. அப்போது விமானத்தில் பயணம் செய்த ஒருவர் எனது இடுப்பில் கைவைத்து சில்மிஷம் செய்தது தெரிய வந்தது. இதனால் எனக்கு வந்த கோபத்திற்கு அந்த நபரின் கன்னத்தில் நான்கு அறை விட்டேன். இது போன்ற சம்பவங்கள் நடக்கும் போது சகித்துக் கொண் டு செல்லாமல் உடனடியாக இதுபோன்ற தக்க பாடம் புகட்ட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

சென்னை

# சென்னைக்கு மோடி வருகிறார்

சென்னை - கோயம்புத்தூர் இடையே வந்தே பாரத் ரயில் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கு பிரதமர் மோடி எதிர்வரும் 8 ஆம் திகதி சென்னைக்கு வருகைதரவுள்ளார்.

அதனால், சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ரயில்வே அதிகாரிகள், ஆர்பிஎஃப் அதிகாரிகள் மற்றும் தமிழக பொலிஸார் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

அன்றையதினம் மாலை 4 மணி முதல் 4.30 மணிக்குள் சென்ட்ரல் ரயில் நிலையம் வந்து, வந்தே பாரத் ரயில் சேவையை ஆரம்பித்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




# பெண்கள் வானொலிக்கு தலிபான்கள் தடை

காபூல்

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டிற்குள் சென்றதை அடுத்து அந்நாட்டில் பெண்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, அந்நாட்டில் பெண்கள் நடத்தி வந்த ஒரே வானொலியான 'சடை பனோவன்' (பெண்களின் குரல்) என்ற வானொலிக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

இந்த வானொலி 10 ஆண்டுகளாக நடைபெற்று வந்துள்ளது. இதன் 8 பணியாளர்களில் 6 பேர் பெண்கள். இது அந்நாட்டின் ஒரே பெண்கள் நடத்தும் வானொலியாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில், இந்த வானொலிக்கு அந்நாட்டின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார துறை தடை விதித்துள்ளது.



இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசாரத் துறையின் பிராந்திய இயக்குநர் மொயிசுதீன் அகமதி, "ரம்ஜான் மாதத்தில் இசை ஒலிபரப்புவதன் மூலம் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தின் கொள்கைகளை இந்த வானொலி தொடர்ந்து மீறி வருகிறது. அதன் காரணமாகவே இந்த வானொலிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

அபுதாபி

# புத்தகம் வெளியிட்டு சிறுவன் கின்னஸ் சாதனை

அபுதாபியைச் சேர்ந்த சயீத் ரஷீத் அல்மெய்ரி என்ற சிறுவன் தனது 4 வயதில் 218 நாட்களில் புத்தகத்தை வெளியிட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளான். உலகில் மிக இளம் வயதில் புத்தகத்தை வெளியிட்ட இளம் தனி நபர் (ஆண்) என்ற பிரிவில் அந்த சிறுவன் இந்த சாதனையை படைத்துள்ளான்.

கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி குழந்தைகள் விரும்பிப் படிக்கக் கூடிய "எலிஃபண்ட் சயீத் மற்றும் கரடியும்" என்ற புத்தகத்தை சிறுவன் சயீத் ரஷீத் வெளியிட்டான்.




இந்த புத்தகம் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புத்தகம் இரக்கம் மற்றும் இரு விலங்குகளிடையே எதிர்பாராத நட்பு பற்றிய கதையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.

இந்த புத்தகத்தை எழுதி கின்னஸ் சாதனையில் இடம்பெற சயீத்துக்கு அவரது மூத்த சகோதரி அல்தாபி பக்கபலமாக இருந்துள்ளார்.

பின்லாந்து

# மகிழ்ச்சி குறித்து மக்கள் கூறுகின்றனர்

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் எந்த அளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்; அதற்கான சூழல் எந்த அளவு இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு மகிழ்ச்சியான நாடுகளை தரவரிசைப்படுத்தி ஐ.நா. வெளியிட்டு வருகிறது. அதன்படி கடந்த சில தினங்களுக்கு முன்னர் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், ஐரோப்பிய நாடான பின்லாந்து முதலிடம் பிடித்தது.

மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் பின்லாந்து முதலிடம் பிடிப்பது இது முதல் முறை அல்ல. இதற்கு முன்னர் 5 முறை பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் முதலிடம் பிடித்திருக்கிறது. இந்த நிலையில், ஐ.நா.வின் கூற்றுபடி பின்லாந்து மக்கள் உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்பது குறித்து நியூயோர்க் டைம்ஸ் செய்தி நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வு, பின்லாந்தில் உள்ள தனிநபர்களிடம் நடத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது



ஆய்விற்காக பின்லாந்து மக்களிடம் பேசும்போது, உண்மையில் இந்தப் பட்டியல் யதார்த்ததுக்கு முரணானது என அவர்கள் பதிலளித்துள்ளனர். பின்லாந்தை சேர்ந்த ஆங்கில ஆசிரியர் நினா ஹன்சன் கூறும்போது, "நான் மகிழ்ச்சியாக உணரவில்லையே" என்றார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் டொட்டென்ஹாம் எவெர்ற்றன் போட்டி




இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியது.

டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேன் பெற்றதோடு, எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மிஷெல் கீன் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், தலா 50 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், நான்காமிடத்தில் டொட்டென்ஹாமும் காணப்படுகின்றன. இதில், சிற்றி ஒரு போட்டி குறைவாகவும், நியூகாசில் இரண்டு போட்டிகள் குறைவாகவும் விளையாடியுள்ளன.

ஐ.பி.எல்:

# சுப்பர் ஜையண்ட்ஸை வென்ற சுப்பர் கிங்ஸ்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸு டனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சுப்பர் ஜையன்ட்ஸ்

சுப்பர் கிங்ஸ்: 217/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 57 (31), டெவோன் கொன்வே 47 (29), அம்பாதி ராயுடு ஆ.இ 27 (14), ஷிவம் டுபே 27 (16), மொயின் அலி 19 (13), மகேந்திர சிங் டோணி 12 (03) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி பிஷ்னோய் 3/28 [4])

சுப்பர் ஜையன்ட்ஸ்: 205/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 53 (22), நிக்கலஸ் பூரான் 32 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொயின் அலி 4/26 [4], மிற்செல் சான்ட்னெர் 1/21 [4])


போட்டியின் நாயகன்: மொயின் அலி

இந்நிலையில், கௌகாத்தியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்கிறது.

# யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் ஹரி மக்குவாயா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அணித்தலைவரான ஹரி மக்குவாயாவை நடப்பு பருவகால முடிவில் அக்கழகம் விற்கும் எனத் தெரிகிறது.

யுனைட்டெட்டின் முகாமையாளரான எரிக் டென் ஹக், குழாமை வெளியேற்றுவதில் பாரபட்சம் பார்க்க வேண்டாமெனக் கூறியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.






# பார்சிலோனா செல்லும் பெஞ்சமின் பவார்ட்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் பின்களவீரரான பெஞ்சமின் பவார்ட்டைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா முயல்வதாகக் கூறப்படுகிறது.

27 வயதான பவார்ட்டைக் கைச்சாத்திடும் போட்டியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலப்ந்தாட்ட ராஜாக்களின் சமர்:

# கோணேஸ்வராவைத் தோற்கடித்த புனித சூசையப்பர்

**கதிரவன்**

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கால்பந்தாட்ட ராஜாக்களின் சமர் போட்டியில் அக்கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட அணியை புனித சூசையப்பர் கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட அணி 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இப்போட்டியின் சிறந்த வீரராக புனித சூசையப்பர் கல்லூரி வீரர் கே. மிதுஷன், நட்சத்திர வீரராக கோணேஸ்வராவின் எஸ்.எம். முகீத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு நினைவுக்கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 05 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது